பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 31 திங்கட்கிழமை (16-09-1991) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 286

# சமாதான முயற்சி தோல்வி; இனி இறுதிவரைச் சண்டை!

## ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு நகரில் வெளிச்ச வீட்டு வீதியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து ரெலோ உறுப்பினரான ரொமேஷ் என்பவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

சைக்கிளில் வந்த— விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருவர்— அவரைச் சுட்டுக் கொன்றதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## ராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, செப். 16

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த விரும்பிய ஸ்ரீலங்கா அரசு, இப்போது பேச்சுக்கான வாய்ப்பு அறவே இல்லை என்று அறிவித்து விட்டதாக உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிவிப்பை ஊர்ஜிதப்படுத்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, "இனிமேல் விடுதலைப் புலிகளை இறுதியாக அழிக்கும் வரை போர் தொடரும்" என்று அறிவித்தார்.

இத்தகவலை ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் நேற்று வெளியிட்டது.

''விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு இணங்கினாலும், அவர்கள் ''ஈழம்'' தொடர்பான தமது நிலையிலிருந்து இறங்கவில்லை. இதனால் சமாதானப் பேச்சுகள் சிறிய நன்மையையே தரமுடியும்''— என்று இராணுவத் தளபதி சொன்னார்.

''சமாதானத்துக்கான ஒலிவ் இலையை நாங்கள் அவர்களுக்கு நீட்டினோம். ஆனால் அவர்கள் ஈழத்தைக் கைவிட மறுத்துக்கொண்டு, நிபந்தனையற்ற பேச்சுக்கு இணங்குவதாக அறிவித்ததன் மூலம் எம்மைப் பரிகாசப் படுத்தினார்கள்.''— என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சொன்னார்.

இதேவேளை—

விடுதலைப் புலிகள் விவகாரத்தை இந்திய-ஸ்ரீலங்கா அரசுகள் கூட்டாகக் கையாள்வது தொடர்பாக, திட்டவட்டமான யோசனைகளை ஸ்ரீலங்கா அரசு இந்தியாவிடம் சமர்ப்பிக்கவிருப்பதாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இருதயபுரத்தில் இரு பொலீஸார் காயம்

கொழும்பு, செப். 16

மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் கடந்த வியாழனன்று மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலீஸார் இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் அவர்கள் படுகாயமடைந்தனர். இருவரும் அம்பாறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## நாடாளுமன்றை பிரேமா கலைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### லலித் குழுவினர் அறிவிப்பு

நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி பிரேமதாஸா நடவடிக்கை எடுத்தால் அதனை எதிர்த்து, சட்டரீதியிலும் அரசியல் ரீதியிலும் போராடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய இம்மூவரும்—

குற்றப்பிரேரணை காலாவதியாகிவிட்டது என்று ஜனாதிபதி கூறியிருப்பது மக்களை குழப்புவதற்கே என்றும் தெரிவித்தனர். (உ-எ)

## பிரேமாவுக்கு எதிரான பிரேரணையில்

## ஒப்பமிட்ட ஐ. தே. கவினரை அனுரா எச்சரிக்கிறார்!

கொழும்பு, செப். 16

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையில் ஒப்பமிட்ட ஆளும் கட்சி எம். பிக்களை பகிரங்கமாக முன் வந்து அதனை ஆதரிக்குமாறு திரு. அனுரா பண்டாரநாயக்கா கேட்டிருக்கிறார்.

இல்லையேல் எவ்வகையிலும் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாமற் போகும் எனவும் அவர் எச்சரித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை பாணந்துறையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசிய போதே திரு. அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளிடம் பிடிபட்ட 15 சிப்பாய்கள் தற்போது பணயக் கைதிகளாம்!

கொழும்பு, செப். 16

கடந்த வருடம் மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது தம்மிடம் பிடிபட்ட— ஆகக் குறைந்தது 15 சிப்பாய்களை— விடுதலைப் புலிகள் தமது முல்லைத்தீவு முகாம் ஒன்றில் பணயக்கைதிகளாகத் தடுத்து வைத்திருக்கின்றனர்.

இராணுவ புலனாய்வுத் தகவலை மேற்கோள் காட்டி சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் இத் தகவலை வெளியிட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

''யுத்தக் கைதிகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அடிக்கடி இடம் மாற்றப்படுகிறார்கள். அதற்கான காரணம் எமக்குத் தெரியவில்லை''—என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

இந்தக் கைதிகளை விடுவிப்பதற்கு புலிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுவது குறித்து, விரைவில் முடிவு செய்யப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை—

ஆனையிறவு சண்டையின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறில் காயமடைந்த

## ஸ்ரீலங்கா படையினர் பலர் அ'புர ஆஸ்பத்திரியிலும்!

கொழும்பு, செப். 16

மணலாறு முல்லைத்தீவுப் பகுதிகளில் நடந்து வரும் சண்டையில் காயமடையும் பெரும் எண்ணிக்கையான ஸ்ரீலங்காப் படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக நாளொன்றுக்கு 50க்கும் மேற்பட்டோர் என்ற வீதத்தில் படையினர் அங்கு அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் வார்ட்டுகள் பல நிரம்பி வழி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாடாளுமன்றை அழிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார்

### லலித் அத்துலத்முதலி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16

''சபாநாயகரையும் எம். பிக்களையும் எச்சரிப்பது போன்று ஜனாதிபதியின் நடவடிக்கை அமைந்திருக்கிறது. நாடாளுமன்றத்தையே அழித்துவிட ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.''

— இவ்வாறு ஜனாதிபதி மீது குற்றம் சாட்டினார் முன்னாள் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி. செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவர் அங்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இரகசிய வாக்கெடுப்பு நடந்தால் ஆளும் கட்சியினர் வெளிநடப்பு!

கொழும்பு, செப். 16

எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணை மீது இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும் என சபாநாயகர் அறிவித்தால்—

அந்த அறிவிப்பை ஆட்சேபித்து வாக்கெடுப்பு நடக்கும் சமயம் ஆளும் கட்சி எம். பிக்கள் அனைவரும் நாடாளுமன்றை விட்டு வெளியேறுவர்.

இத்தகைய பதில் நடவடிக்கை ஒன்றுக்கு ஆளும்கட்சி முன்னணித் தலைவர்கள் இப்போது திட்டமிட்டு தயாராகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆளும் கட்சி எம். பிக்கள் சபையில் இருந்து இரகசிய வாக்கெடுப்பில் பங்குபற்றினால்தான், அவர்கள் அரசுக்குத் தெரியாமல் —ஜனாதிபதிக்கு எதிராக— வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

அத்தகைய சந்தர்ப்பத்தை அவர்களுக்கு கிடைக்க விடா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபனை நினைவு கூர்ந்து அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 16

தியாகி திலீபனை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்து முகமாக குடா நாடெங்கும் மக்களால் பல்வேறு நிகழ்ச்சிகள் நேற்று முதல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வீதிகள், சந்திகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்களின் முன்றல்களில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு. தீபம் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

வீதிகளை தோரணங்களும், மஞ்சள் - சிவப்பு நிறக் கொடிகளும் அலங்கரிக்கின்றன.

பல இடங்களிலும் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்தவேளை எடுக்கப்பட்ட படங்கள் வைக்கப்பட்டுள்ளன. சிறு ஒழுங்கைகள், மூலை முடுக்குகளில் கூட சிறு குடில்கள் அமைக்கப்பட்டு அவற்றில் திருவுருவப் படங்களை வைத்து மாலையிட்டும் தீபம் ஏற்றியும் மக்கள் திலீபனை நினைவு கூர்ந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... சபை கூடயிக்கை பெரிய அமளி இருக்குது எண்டு சொல்லுங்கோ......!

## பிரேமாவின் சட்ட விரோத உத்தரவு; ஆயுதப் படையினர் ஏற்கக்கூடாது!

### லலித் குழு, எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, செப் 16

ஜனாதிபதி பிரேமதாஸா விடுக்கும் சட்டவிரோத உத்தரவுகளை ஏற்றுச் செயல்பட வேண்டாம் என்று முப்படைகளுக்கும் பொலீஸாருக்கும், எதிர்க்கட்சிகளும், ஐ. தே. கவிலிருந்து விலக்கப்பட்ட எம். பிக்கள் குழுவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அரசியல் யாப்பின்படி பாதுகாப்புப்படைகள் செயல்பட வேண்டும் என்று அவை கோரியுள்ளன.

நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிடலாம் என்ற நிலை தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு எதிர்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளில்—

''அரசியல் யாப்பின்படி தேர்தல் ஆணையாளர் நடந்துகொள்ள வேண்டும்'' என்று கோரப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை தொடர்பாக தேடப்பட்ட சிவராசன் யார்?

## "புரொண்ட்லைன்" சஞ்சிகை வெளியிட்ட தகவல்

ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ் காந்தி கொலையின் சூத்திரதாரி என்று இந்திய மத்திய புலனாய்வுத் துறையினரால் (சி பி ஐ) சந்தேகிக்கப்படுபவர் ஒற்றைக்கண் சிவராசன்.

''யார் இந்த சிவராசன்?'' என்ற தலைப்பில் இந்தியாவில் இருந்து வெளிவரும் ''புரொண்ட்லைன்'' சஞ்சிகை வெளியிட்ட கட்டுரை கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சிவராசனின் உண்மையான பெயர் பாக்கியசந்திரன். இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்.

ஒற்றைக்கண் சிவராசன் எனப் 'புகழ்' பெற்ற பாக்கிய சந்திரனுக்குப் பல பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. ராஜன் ராஜா, அருமை, அரவிந்த், ரகுவரன், ரகு, ரகுவப்பா என நண்பர்களும், இயக்கத்தினரும் இவரை அழைத்து வந்தனர்.

சிவராசனின் தயார் பெயர் சிவபாக்கியம். இவர் இப்போது வடக்கில் வாழ்ந்து வருகிறார். சிவராசனின் தந்தை பெயர் சந்திரசேகரம் பிள்ளை. இவர் தமிழ் தேசிய உணர்வுகொண்ட ஆங்கில ஆசிரியர். தமது பெயர்களை இணைத்தே தம் மகனுக்கு பாக்கியசந்திரன் எனப் பெயரிட்டனர்.

தந்தை சந்திரசேகரன் உடுப்பிட்டிவாசி. அங்குள்ள உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய அவர் அம்மொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்தார்.

உடுப்பிட்டி வீரபத்திரன் கோவிலடியைச் சேர்ந்த சந்திரசேகரன் பிள்ளை, அக்காலத்தில் உடுப்பிட்டியில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்த சமசமாஜக் கட்சியை ஆதரிக்காது காலஞ்சென்ற தமிழ்த் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியையே ஆதரித்து வந்தார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியை அவர் ஆதரிக்கத் தொடங்கினார்.

சந்திரசேகரம் 1977 ஆம் ஆண்டு உயிர் நீத்தார். இதன் பின்னர் குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார் இந்தச் சிவராசன்.

சிவராசன் 1958 ஆம் ஆண்டு அக்குடும்பத்தின் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருக்கிறார்கள். சிவராசனின் ஒரு தம்பி வெளிநாடொன்றில் வசித்து வருகிறார். இன்னுமொருவர் தொழில் நுட்பவியலாளராகப் பணியாற்றி வருகிறார். மூன்றாமவர் சிவராசனைப் போலவே புலிகள் இயக்கத்தில் இணைந்திருக்கிறார். இவர்கள் மூவருமே திருமணமானவர்கள். தங்கைகளில் ஒருவர் பிறப்பிலேயே மனக்கோளாறு கொண்டவர். மற்றத் தங்கை பாடசாலை ஆசிரியை திருமணமாகிவிட்டது.

### ஆங்கிலத்திலும் வல்லவர்

சிவராசன் தமிழ் மொழியில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் வல்லவர். 1983ஆம் ஆண்டின் பின்னர் இந்தியாவுக்கு அவர் வந்து போகத் தொடங்கியதும் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி மொழிகளிலும் தட்டுத்தடுமாறிப் பேசக் கற்றுக் கொண்டார். தமிழ் நாட்டு மண்வாசனையுடன் அவருக்கு நன்கு தமிழ் பேச வரும்.

### பணம்கட்டி ஏமாந்தவர்

சிவராசன் படிப்பில் கெட்டிக்காரன். ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் வெகு திறமையுடன் சித்திபெற்ற அவர், உயர் தர வகுப்பிலும் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினார். பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியாவது அவர் திட்டமாக இருந்தது. 1977 இல் தந்தை காலமானதும் அவர் படிப்பைக் கைவிட வேண்டியதாயிற்று. படிப்பை விட்டதும் மத்திய கிழக்கு செல்லலாம் என அவர் திட்டமிட்டார். அதுவும் அவருக்கு வாய்க்கவில்லை. ஏனெனில் அவர் எந்த முகவரை நம்பிப் பணமும் கட்டிவிட்டு விமான டிக்கெட் வரும்வரை காத்திருந்தாரோ அந்த முகவர் பணத்துடன் நழுவி மறைந்தார். இப் பயண முகவர் மட்டுமே சிவராசனை ஏமாற்றியிருக்காவிட்டால் சிவராசனின் வாழ்க்கை வேறுவிதமாக அமைந்திருக்கலாம்.

குடும்பப் பாரத்தை சுமக்க வேண்டிய சிவராசன் மின்சார சபையில் சேர்ந்து பணியாற்ற ஆரம்பித்தார். திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் அவர் சில காலம் மின்சார சபை ஊழியராகச் சேவையாற்றியிருக்கிறார்.

### விடுதலை வேட்கை

மின்சார சபை ஊழியராக இருந்த போது விடுதலை வேட்கை அவருள் தகிக்க ஆரம்பித்தது. ஒரு தடவை ஈழக் கோரிக்கை தொடர்பான பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த போது அவர் பொலீசாரினால் கைது செய்யப்பட்டார். இந் நிகழ்ச்சி கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றது. சிறை வைக்கப்பட்டிருந்த போது ''தமிழீழம் வாழ்க'' என சுவரிலும் தன் உணவுத் தட்டிலும் அவர் எழுதி வைத்துப் பொலீசாரிடம் நன்கு உதை வாங்கிக் கட்டிக் கொண்டார். பின்னர் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி ஒட்டிய குற்றத்தின் பேரில் யாழ். கோட்டையில் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். 1983 இனக் கலவரத்தின் போது சிவராசன் யாழ். கோட்டையில் கம்பி எண்ணிக்கொண்டிருந்தார்.

### ஆரம்பத்தில் ரெலோவில்

இனக்கலவரம் முடிந்த பின்னர் விடுதலை பெற்று வெளியே வந்த சிவராசனின் விடுதலை வேட்கை மேலும் வேகம் பெற்றிருந்தது. இதை அடுத்து அவர் ரெலோ இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சிறு வர்த்தக சமூகமான தனக்காரர் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்தவரே சிவராசன். உடுப்பிட்டி வீரபத்திர கோயிலடி, மொட்டைப் பிள்ளையாரடி மற்றும் வாசிகசாலையடி பகுதிகளில் இச் சமூகத்தினர் அதிகம் வாழ்ந்து வருகிறார்கள்.

ரெலோவைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர் தாஸ் உடுப்பிட்டியைச் சேர்ந்தவராக இருந்ததால் உடுப்பிட்டி இளைஞர்களில் பலர் ரெலோவில் இணைந்தனர். அவர்களில் சிவராசனும் ஒருவர்.

சிவராசனின் விடுதலை இயக்க குரு ரெலோவின் மனோ மாஸ்டர். ரெலோ தலைமையுடன் மனோமாஸ்டர் கருத்து வேறுபாடு கொண்ட போது அவருடன் இயக்கத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்களில் சிவராசனும் ஒருவர். இந்தியாவுக்கு மனோ மாஸ்டருடன் சென்ற சிவராசன் அங்கு ஆயுதப்பயிற்சி பெற்றார்.

மனோ மாஸ்டரின் செல்வாக்கால் வல்வெட்டித்துறையில் ரெலோ பெயர் பெற்றிருந்தது.

மனோ மாஸ்டரின் மறைவோடு வல்வெட்டித்துறையில் ரெலோவின் செல்வாக்கு அஸ்தமித்தது. தமது தலைவரை இழந்த சிவராசனும் ஏனைய இளைஞர்களும் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

இதன் பின்னர் சிவராசன் தீவிர புலி உறுப்பினரானார்.

### பணம் வசூலிப்பதில் சூரர்

சிவராசன் திட்டமிட்டு ஆட்களைத் தீர்த்துக் கட்டுவதில் தீரர். மேலும் கறாராகப் பணம் வசூலிப்பதிலும் சூரர். பண வசூலில் கடுமையாக நடந்து கொள்ளும் இவர் பாரபட்சமும் காட்டுவதில்லை.

ஒரு தடவை தனது அத்தை வீட்டுத் திருமணத்தில் வழங்கப்பட்ட சீதனப் பணத்தில் 25 ஆயிரம் ரூபாவை இயக்கத் தட்சிணையாக இவர் பெற்றுக் கொண்டாராம்.

போதாக்குறைக்கு கல்யாண சாப்பாட்டின் ஒரு பகுதியை பக்கத்தில் இருக்கும் புலிகள் பாசறைக்கு அனுப்பி வைக்கவும் செய்தாராம். இன்னும் ஒரு சமயம் இவரது மாமனார் தமது சொத்தை விற்ற போது அவ்விடயத்தை அறிந்து கொண்ட சிவராசன் அவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபாவை எடுத்து இயக்கத்துக்குக் கொடுத்தார்.

இச்சம்பவங்கள் இவர் எவ்வளவு தூரம் இயக்க சிந்தனை கொண்டவராக இருந்தார் என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. இந்திய அமைதி காக்கும் படையினர் வடக்கில் நிலை கொண்டிருந்த போது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தவர் எனக் கருதப்பட்ட விதவையான ஐந்து பிள்ளைகளின் தாயார் பூரண சாந்தி கொலை செய்யப்பட்டார். இக்கொலையின் சூத்திரதாரி என்று வர்ணிக்கப்படுபவர் சிவராசனே.

### கோட்டை மோதலில்...

யாழ். கோட்டையருகே நடைபெற்ற மோதலொன்றில் 1987ஆம் ஆண்டில் இவர் தனது இடது கண்ணை இழந்தார். இந்தியப்படையினருடன் மோதி வந்த இவர் இந்தியப்படை இலங்கையை விட்டு அகன்றதும் புலிகளின்

[3 ஆம் பக்கம் பார்க்க]


## சின்னஞ்சிறு விளம்பரம்

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவரிர். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

## குழந்தை இயேசுவுக்கு நன்றி

மிகவும் அன்பு நிறைந்த குழந்தை இயேசுவே எங்கள் மேல் நீர் பொழிந்தருளிய எல்லா நன்மைகளுக்காகவும் மனம் நிறைந்த எங்கள் நன்றியை செலுத்துகின்றோம். குழந்தை இயேசுவின் திரு இருதயப் பக்தி மக்கள் உள்ளங்களில் எல்லாம் அதிகமாகப் பரவுவதாக.

நன்றி

[18165]

## இந்து நாகரீகம் G.C.E. A/L

திரு. ஜோதீஸ்வரன்

**கலை வர்த்தகக் கல்லூரி C.C.A.**

யாழ்ப்பாணம்.

8-9 பிரிவு I — 92
9-10 பிரிவு II — 92
11-12 பிரிவு I — 91
1-2 பிரிவு II — 91

நடைபெறுகிறது.

(சி-0513)

## உயர் கலை வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம்.

First In Com.
G. A. Q.

ஆரம்பம்:
15 - 09 - 1991
மு. ப. 8-00

[சி-0515]


## அணு ஆயுத பரிசோதனை

அணு ஆயுத பரிசோதனை ஒன்றை அமெரிக்க அணு விஞ்ஞானிகள் நேற்று நெவேடா பாலைவனத்தில் நடத்தினார்கள்.

இந்த ஆண்டில் அமெரிக்கா நடத்திய ஐந்தாவது அணு ஆயுத பரிசோதனை இதுவாகும்.


## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்

அமரர்

**சு. கிருஷ்ணபிள்ளை**

(அரச கட்டட ஒப்பந்தக்காரர்)

தோற்றம்: 08 01-1934
மறைவு: 09-09-1989

மங்காத மணி விளக்காக
குன்றாத சுடர் விளக்காக
குன்றின் மேல் தீபமாக
எங்கள் குடும்பச்சுடர் விளக்காக
எங்கள் அன்புத் தெய்வமே!
அரக்கரின் ஆக்கிரமிப்பால்
எம்மை எல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட
தெய்வமே.

''ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்''

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

இல: 4,
கோணாவில்,
அக்கராயன்;

(18169)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18 - 03 - 1943

மறைவு: 28 - 08 - 1990



திதி: 16 - 09 - 1991

**பொன்னையா மகேந்திரன்**

(புகைபிரத நிலைய அதிபர் - முருங்கன்)

அன்புத் தெய்வமே! நாம் வாழ வழி காட்டிய அன்பின் சிகரமே, எம்மை நல்வழி நடாத்திய பண்பின் உறைவிடமே, கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழ வைத்த குடும்பத்தின் குலவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

''ஜெயபதி'',
இழவிதோட்டம்,
சரவெட்டி கிழக்கு,
சரவெட்டி.

(18074)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 - 12 - 1931



மறைவு: 17 - 08 - 1991

**பொன்னம்பலம் செல்வராசா**

(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

எம்மை அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வளர்த்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்.

''ஸ்ரீரங்கம்''
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை

[18161]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஜெயலலிதாவின் தற்கொலை முயற்சி!

தமிழகத்தில் தமிழர்கள் புத்தெழுச்சி பெற்று, பண்டைய மேன்மைமிகு நிலையை அடைவதை வடநாட்டார் விரும்பவில்லை. தமது அடக்குமுறைகள், அதிகாரந் தனங்கள், மேலாதிக்கங்களை இழந்துவிட அவர்கள் தயாராக இருக்கவில்லை. அதன் காரணமாக தேசிய ஒற்றுமை என்ற பெயரில், தமிழகத்தில் தமக்கென அடிவருடிகளை இனங்கண்டு அவர்கள் மூலம் தமிழர்களின் எழுச்சியை மழுங்கடிப்பதற்கு வேண்டியதை எல்லாம் செய்தார்கள்.

இதேவேளை அண்ணாவின் மறைவின் பின்னர் தமிழ்த் தேசியவாத இலட்சியம் மறக்கப்பட்டு, தமிழர் நலம் மறக்கப்பட்டு, வெறும் சுயநலவாத அரசியல் தமிழகத்தில் மேலோங்கியது. அதனால் முழுமையான சுதந்திரத்துக்கான எழுச்சியும் ஓரளவு அடங்கிப் போனதாகத் தென்பட்டது. தமிழக மக்களின் எழுச்சியும், உணர்வும் மங்கிப் போனதாக வெளியில் தெரிந்தது. உண்மை அதுவல்ல. நீறு பூத்த நெருப்பாக தமிழ்த் தேசியவாத விழிப்புணர்வு கனன்று கொண்டிருந்தது என்பதே சரி. தமிழகத்தில் இப்போது நடைபெற்று வரும் எழுச்சிக் கூட்டங்களும் மாநாடுகளும் அதனையே பிரதிபலிக்கின்றன.

இதனை உணராமல், அரசியல் அனுபவம் குறைந்த ஜெயலலிதா, அந்த எழுச்சியை அடக்திவிடலாம் எனக் கனவு காண்கிறார். வடநாட்டாரின் ''ஏஜண்டாக'' இருந்து தமிழர் தேசியத்தை நசுக்கிவிட நினைக்கிறார்.

விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவதாகவும், தமிழகத்தில் இருந்து விரட்டுவதாகவும் கூறிக்கொண்டு, மறைமுகமாக தமிழக மக்களின் எழுச்சி நடவடிக்கைகளை அடக்க முனைகிறார். பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதற்குக் கூடத் தடைவிதித்து தமிழக மக்களின் சனநாயக உரிமைகளுக்கு வேட்டு வைக்கிறார்.

இவ்வாறு செய்வதன் மூலம் அவர் தமது தலையில் தானே மண் அள்ளிப் போடுகிறார் என்பதை உணரவில்லை. மக்கள் எழுச்சியை, சனநாயக முறையில் தெரிவிப்பதற்கான கால்வாய்களை அடைப்பதன் மூலம், வன்செயல்களுக்கு வழி சமைக்கிறார். தற்கொலைக்கு ஒப்பான, அரசியல் முதிர்ச்சி இல்லாத அற்பத்தனமான நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுகிறார்.

மக்களின் உரிமைகள், உணர்வுகள், எழுச்சிகளைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க முயலும்போது அது பெரும் சமூக அமுக்கத்தை உண்டாக்கும். அந்த அமுக்கம் ஒரு நாளைக்கு வெடித்தே தீரும்.

இதனைப் புரிந்து கொள்ளாமல் தமிழக அரசும், மத்அரசும் கடுமையாகவும், கொடுமையாகவும் நடக்க முயன்றால் அதற்குரிய விளைவை இருசாராரும் அனுபவிக்க நேரிடும். இது இயற்கையின் நியதி.

தமிழர்களின் சனநாயக ரீதியான எழுச்சியை அடக்க முயன்றால், வன்முறை தானாகவே வெடிக்கும். தமிழக மக்களின் சட்டரீதியான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்க முயன்றால் அது பிரிவினைப் போராட்டத்துக்கு இட்டுச் செல்லும். இவற்றைப் பின்னுக்கு நின்று செய்விப்பதற்கு அல்லது செய்வதற்கு விடுதலைப் புலிகள் தேவையில்லை. ஒரு ஜெயலலிதாவும் மத்திய அரசில் ஒரு சிலரும் போதும்!

யாழ். பல்கலைக் கழகத்துக்குரிய

# இரசாயனப் பொருள்கள் கொழும்பில் தேக்கம்

யாழ். பல்கலைக் கழகத்துக்கென வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 30 லட்சம் ரூபா பெறுமதியான இரசாயனப் பொருள்கள் கொழும்பில் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை கப்பல் மூலம் எடுத்துவர கப்பல் கப்டன்களும் மறுப்புத் தெரிவித்துள்ளனராம்.

இந்தப் பொருள்களை வடக்கே எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி அளித்தும், போககுவரத்துப் பிரச்சினையால் அவற்றை இங்கு கொண்டுவர முடியாதுள்ளதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-3)

கொலை செய்த பின்னர்

# தலைமறைவானவர் நேற்று கைதாகி மரணதண்டனை!

காங்கேசன்துறை, செப். 16

மல்லாகத்தைச் சேர்ந்த காண்டீபன் என்பவருக்கு நேற்று முற்பகல் மருதனார் மடத்தில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபர் சில மாதங்களுக்கு முன்னர் போராளி ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார். ஆனால் அது சம்பந்தமான விசாரணைக்குச் சமுகமளிக்காமல் தலைமறைவாக இருந்து வந்தார்.

நேற்று அதிகாலை இவர் விடுதலைப் புலிகளினால் சுதுமலையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. [அ 68]

ஊர்காவற்றுறையிலிருந்து

# இடம் பெயர்ந்தோருக்கு இன்று முதல் உலர் உணவு

யாழ்ப்பாணம், செப். 16

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இன்று முதல் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

மண்கும்பானில் இயங்கி வந்த ஊர்காவற்துறை ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகம், தற்போது யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியிலுள்ள ''பி.எஸ்.சேவிஸ் ஸ்ரேசன்'' மேல் மாடியில் இயங்கி வருகிறது.

இதே சமயம்—

'அ', 'உ' அட்டைகளுக்கு மானிப்பாய் வீதியிலுள்ள ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. கிளையில் உலர் உணவு விநியோகம் நடைபெற்று வருகின்றது.

'இ' அட்டைக்கு, கஸ்தூரியார் வீதி ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கையிலுள்ள ப. நோ. கூ. ச. கிளையில் இன்று முதல் விநியோகம் ஆரம்பமாகும்.

பின்வரும் ஒழுங்கு முறைப்படி அங்கு உலர் உணவு விநியோகம் நடைபெறும்:-

இன்று (16 ஆம் திகதி): 1, 4, 7 ஆம் இலக்கக் கிளைகளைச் சேர்ந்த பாவனையாளருக்கு

17 ஆம் திகதி: 2, 6, 8 ஆம் இலக்கக் கிளைகளைச் சேர்ந்த பாவனையாளருக்கு

18 ஆம் திகதி: 3, 9, 10 ஆம் இலக்கக் கிளைகளைச் சேர்ந்த பாவனையாளருக்கு

19 ஆம் திகதி: 13, 6, 11 ஆம் இலக்கக் கிளைகளைச் சேர்ந்த பாவனையாளருக்கு

தீவகத்தில் இருந்து இடம்பெயராது அங்கேயே தங்கியுள்ள மக்களுக்கு மண்கும்பானிலுள்ள கிளையில் விநியோகம் நடைபெறும். (ஒ-125)

# ஐ. நா. சபையில் புதிதாக 7 நாடுகளுக்கு அங்கத்துவம்

வாஷிங்டன், செப். 16

ஐக்கிய நாடுகள் சபையில் புதிதாக ஏழு நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இவற்றுடன் சேர்த்து ஐ. நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை 166 ஆக அதிகரிக்கின்றன.

புதிதாக இடம்பெறும் நாடுகளின் விவரம் வருமாறு:-

★ தென்கொரியா
★ வடகொரியா
★ லத்வியா
★ எஸ்தோனியா
★ லித்துவேனியா
★ மைக்கோனீசியா
★ மார்ஷல் சமஷ்டித் தீவுகள்

ஐ. நாவின் 46 ஆவது ஆண்டுப்பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. அப்போது புதிய உறுப்புநாடுகள் சம்பிரதாய பூர்வமாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. [அ-எ]

## தியாகத்தேன்: 2

ஊரெழு பெற்றெடுத்த
உத்தமன் தமிழர் வாழ....
நீரெதும் உண்ணேனென்று
நீண்டநாட் பயணந்தன்னை
சீருடன் தொடர்ந்தபோது
சேர்ந்தனர் .....
தமிழர் கூட்டம்!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபனின் நினைவாக)

# நாவலர் சிலை திறப்பு விழா

கோப்பாய் நாவலர் பாடசாலை வளவில் அமைந்துள்ள நாவலர் சிலை திறப்பு விழா இன்று 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ-72)

# 5 போராளிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்று வரும் மோதலில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் போராளிகள் ஐவர் வீரமரணமடைந்தனர்.

அலிபா (மாமுடி கிருஷ்ண குமார்—மன்னார்), யுனைதா (வசந்தா தங்கராசா — மட்டக்களப்பு), நியாஸ் (இராமநாதன் ஜெயானந்தராசா— காரைநகர்), சுதா (ரஜனி பாலேந்திரன் — புன்னாலைக் கட்டுவன்), ஜூட்டி (ஜெயதேவி இராசரட்ணம்—உடுத்துறை) ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர். (ஒ)

## ஒப்பமிட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்.

அவர் தமது பேச்சில் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மிகப்பெரிய இரகசியமாக ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வந்த விஷயம் பேணப்பட்டது. ஜனாதிபதிக்கு இறுதிவரை இது தெரிந்திருக்கவில்லை.

குற்றப் பிரேரணையில் கையொப்பம் வைத்த யு. என். பி. எம்.பிக்கள் ஒன்றை உணரவேண்டும்; ஜனாதிபதி பிரேமதாஸா அப்பிரேரணையில் கையொப்பம் வைத்தவர்களை ஒருபோதும் மன்னிக்கவும் மாட்டார்; அதனை மறக்கவும் செய்யார். கையொப்பமிட்ட எம்.பிக்களுக்கு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் யு. என். பி. டிக்கட் கிடைக்கப் போவதுமில்லை.

ஆகவே கைச்சாத்திட்ட யு. என். பி. எம்.பிக்களுக்குள்ள ஒரேவழி, பகிரங்கமாக முன்னே வந்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க எங்களுடன் சேர்ந்து பாடுபடுவதேயாகும்— என்றார். (அ-எ)

## ராஜீவ்...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலைமைப் பீடம் இவரை 'நிபுணத்துவ' வேலைகளுக்கென வைத்துக் கொண்டது போலும்.

சிவராசனை புலிகளின் உளவுப் படைத் தலைவரென்று இந்தியப் பத்திரிகைகள் வர்ணித்து வருகின்றன அல்லவா? இது தவறு. பொட்டு அம்மான் என்பவரே புலிகளின் உளவுப் படைத் தலைவராகக் கடமையாற்றி வந்தார்.

திட்டமிட்டுக் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கும் திறமை கொண்டவர் என்பதாலேயே ராஜீவைத் தீர்த்துக்கட்டும் பொறுப்பு சிவரிடம் விடப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு.

மற்றும் மனித குண்டாகச் செயல்பட்ட தனுவும், தற்கொலை செய்து கொண்ட சுபாவும் சிவராசனின் உறவினர்கள் என்றும் கூடச் சொல்லப்படுகிறது. ஆனால் இக் கூற்றுக்கும் ஆதாரம் கிடைக்கவில்லை.

சிவராசன் மதுபானம் அருந்துபவர், புகைக்கும் பழக்கம் கொண்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சாட்சிகளை விசாரித்ததில் அவருக்கு இப் பழக்கங்கள் இருந்ததாகத் தெரியவரவில்லையாம்.

இலங்கையில் அவருக்குக் காதலிகள் இருந்ததாகவும் தெரியவில்லை என்கிறார்கள் ராஜீவ் கொலைவழக்கு விசாரணையாளர்கள். ★

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களின் பெயர், இலக்கங்கள், நிகழ்ச்சி நிரல் போன்றவை பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கிடைக்காத பாடசாலைகள் தங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். வீரர்களின் அணியும் இலக்கங்கள் மைதானத்தில் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வழங்கப்படும். ஏற்கனவே அறிவித்ததுபோல கோட்டக்கல்வி அலுவலகங்களில் இவை வழங்கப்படமாட்டா என யாழ். கல்வித்திணைக்கள உடற்கல்விப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ)

# லெப். குலன் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 16

மாவிட்டபுரம் பகுதியில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் குலன் (சபாபதி பார்த்தீபன்—கோண்டாவில்) வீரமரணமடைந்தார். (ஒ)

# தாமரைக்கனி கைதானார்

சென்னை, செப். 16

தமிழ்நாடு சட்டசபையில் சுயேச்சை உறுப்பினராக இருக்கும் தாமரைக்கனி நேற்று ஸ்ரீ வில்லிபுத்தூரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த தினமான நேற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் அ. தி. மு. க. கொடியை தாமரைக்கனி ஏற்ற முயன்றார். அதனை அ. தி. மு. க. தொண்டர்கள் ஆட்சேபித்தனர்.

மோதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலீஸார் தாமரைக்கனியை கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## தியாகி திலீப...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருகின்றனர். பல இடங்களில் எழுச்சிப் பாடல்களும், திலீபனின் கருத்துரைகளும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் விசேட கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (அ-3-5-51-68)

## நாடாளுமன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் கூறியதாவது:-

அரசியல் குற்றப்பிரேரணை காலாவதியாகிவிட்டது என்ற ஜனாதிபதியின் நியாயப்படுத்தல் நகைட்புக்குரிய ஒன்றாகும்.

விரக்தியின் விளிம்புக்கு ஜனாதிபதி சென்று விட்டார் என்பதையே இது புலப்படுத்துகின்றது.

இஸ்ரவேலிடமிருந்து எனக்கோ எனது ஆதரவாளர்களுக்கோ நிதி கிடைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

பாதுகாப்பு அமைச்சராக நான் பதவியேற்பதற்கு முன்பு தான் இஸ்ரவேலிடமிருந்து உதவியை இலங்கை பெற்று வந்தது;— என்றார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையலாளர்கள் தேவை

சைவ, அசைவ உணவுகள் மிகவும் தரமான முறையில் செய்யத்தக்கவராகவும் மற்றும் சிற்றுண்டி வகைகளும் செய்பவர்களும் உடன் தேவை அனுபவம் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். 17 9-91 முன் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள குடும்ப நலன் கார்ப்பகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(17917)

# மரண அறிவித்தல்கள்

## கந்தர் சடாசிவம்

சரவணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 44/2 கல்லூரி வீதி, நீராவியடியில் வசித்தவருமாகிய கந்தர் சடாசிவம் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, செல்வராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னத்துரையின் அன்பு மாமனாரும், அனுசியா, தர்சிகா, சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், வனிதாவின் சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் நீராவியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று திங்கட்கிழமை காலை 10 00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செல்வி த. துரையப்பா
(பேறாமகள்)

திருமதி. கந்தசாமி இராசலட்சுமி.
44/2 கல்லூரி வீதி,
நீராவிடி,
யாழ்ப்பாணம், (18171)

## திருமதி செல்லம்மா இராஜகாரியார்

திருமதி செல்லம்மா இராஜகாரியார் 15-09 91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராஜகாரியாரின் அன்பு மனைவியும், திருமதி செல்வராணி சகாதேவனின் (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை] அன்புத் தாயாரும், திரு. சகாதேவனின் [Hindu Board of Education) அன்பு மாமியாரும், ஷதுர்ஷன், நிலக்ஷன் ஆகியோரின் பாசமுள்ள பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இல. 47, புகையிரத வீதி, கொக்குவில் இல்லத்திலிருந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு 16-09-91 இன்று பிற்பகல் 1 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

இ. சகாதேவன்.

[18170]

## திருவாளர் அம்பலவாணர் முத்தையா

[முன்னாள் அலகல்ல எஸ்டேட் பிரதம லிகிதர் கண்டி]

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகக் கொண்டவருமான அம்பலவாணர் முத்தையா நேற்று [15 - 9 - 91] சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, இராசம்மா, பொன்னம்மா, சந்தையா, சின்னையா, சின்னம்மா, குமாரவேலு, சின்னத்தங்கம் ஆகியோரது அன்புச் சகோதரரும், வைத்திலிங்கம் நாகம்மாவின் மைத்துனரும், எந்திரி சுப்பிரமணியம் [பிரதி செயலாளர், நிர்மாணத்துறை. மாகாணசபை திருமலை]. தவமணிதேவி, கணேசம்மா, தணிகாசலம் [ஆசிரியர் யாழ். சன்மார்க்க ம/வி], செல்வநாயகி, நவமணி, தெய்வேந்திரராஜா [U.K], ஆனந்தராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, இராமநாதன்[ கட்டட இலாகா], பவளராணி, காலஞ்சென்ற பாலேந்திரா [துறைமுக அதிகாரசபை திருமலை], கோபாலகிருஷ்ணன் [கணக்காளர் ஜபார்ஜி பிறதேர்ஸ்], டில்லிராணி [பிரான்ஸ்] ஆகியோரது அன்பு மாமனாரும், யாழ்/இந்துக்கல்லூரி மாணவர்களாகிய சுதர்சனன், சசிதரன், பிரபாகரன், சிவசுதன், பாலகிருஷ்ணன், நிரஞ்சன், நிரோஷன், நிர்மலா [வேம்படி], சென் பொஸ்கோ மாணவர்களான பாமினி, பாபுஜி, மைதிலி, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [16 9-91] பிற்பகல் 3.00 மணிக்கு 74, காரைக்காட்டு லேன், பூநாறிமரத்தடி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுககு அறியத்தருகிறோம்.

தகவல்:

மு சுப்பிரமணியம்

[18172]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நித்திகைக்குளம் பகுதியில் நேற்றும் கடும் சண்டை!

யாழ்ப்பாணம், செப். 16

மணலாறு மாவட்டத்தில் நேற்றும் கடும் மோதல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரும், விடுதலைப் புலிகள் போராளிகளும் மிக நெருக்கமாக நின்று சண்டையில் ஈடுபட்டு வருவதாக நேற்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினருக்குஉதவியாக விமானப் படையின் பல்வேறு விமானங்களும் விடாது கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் பல நாசமாகி விட்டன என்றும் காட்டு வளங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் தெரியவருகிறது.

குண்டு வீச்சினால் மணலாறுப் பகுதி மட்டுமல்லாது, முல்லைத்தீவில் ஏனைய சில பகுதிகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை—

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முகாமில் இருந்து 800 மீற்றர் தூரத்தில் அரசுப் படையினர் நிலை கொண்டுள்ளனர் என்று கொழும்பில் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஒ-எ)

# 7 படையினர் பலி! 35 பேர் படுகாயம்!!

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் [சனி] நடந்த சண்டையில் ஏழு ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்; 35 பேர் காயமடைந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த படையினரில் 24 பேர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களில் நடந்த சண்டையில் ஸ்ரீலங்காப் படை தரப்பில் பெரும் உயிரிழப்பும், உடல் ஊனமும் ஏற்பட்டிருப்பதாக சுயாதீன செய்தி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ஒ-எ-த)

★ தமிழகத்திலிருந்து

# போராளிகளை வெளியேற பிரபாகரன் பணிப்பு?

கொழும்பு, செப். 16

இந்தியாவில் விடுதலைப் புலிகளை அரசு கைது செய்து வருவதைத் தொடர்ந்து அங்குள்ள —விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள்— அனைவரையும் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேறும்படி அந்த இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உத்தரவிட்டிருக்கிறார்.

பி. ரி. ஐ. செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

தொலைத்தொடர்பு சாதனம் வழியாக திரு பிரபாகரன் பிறப்பித்த இந்த உத்தரவை இடைமறித்துக் கேட்டபோது இத்தகவல் தெரியவந்தது என்று சில வட்டாரங்கள் கூறியதாக பி. ரி. ஐ. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

# இந்தியப் பிரதமர் ராவுடன் டில்லியில் தொண்டா பேச்சு

சென்னை, செப். 16

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் அமைச்சர் தொண்டமான் புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவ், ஜனாதிபதி வெங்கட்ராமன், வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்.

புதுடில்லியில் இருந்து நேற்று சென்னைக்கு அவர் திரும்பினார்.

சென்னையில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர்—

''இலங்கை தமிழ் அகதிகள் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகவேண்டும். போராளிகள் பிரச்சினையுடன் அகதிகள் பிரச்சினையைக் கலக்கக் கூடாது,''— என்று சொன்னார். (உ-எ)

வடக்கிற்கு பொருள் கடத்தல்:

# 4 லொறிகள், 2 பஜரோக்கள் அ'புர நீதிமன்றத்தில்!

கொழும்பு. செப். 16

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை கடத்திச் சென்றது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை அனுராதபுர மாவட்ட நீதிபதி முன்னிலையில் நான்கு லொறிகள், இரண்டு பஜரோ ஜீப்கள், ஒரு பயணிகள் பஸ், ஒரு கார், தலா 45 கலன் எரிபொருள் கொண்ட 48 பரல்கள் ஆகியவற்றை இராணுவப் பொலீஸார் சமர்பித்தனர்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட வர்த்தகரான பியதிலக, அனுராதபுரம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் என்று அடையாளம் காணப்பட்டார். (உ-எ)

## 'குமாரியில் சவர்க்காரம்

யாழ்ப்பாணம், செப். 16

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் மண்எண்ணெய், சவர்க்காரம் ஆகியனவும் வர இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

## தகர்க்க சதியாம்

புதுடில்லி, செப். 16

இந்திய நாடாளுமன்றக் கட்டடத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க சதி செய்யப்பட்டதாக டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)

## கரை ஒதுங்கிய சடலம்

கொழும்புத்துறை கடற் பகுதியில் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் காயங்களுடன் உருக்குலைந்த நிலையில் நேற்று கரை ஒதுங்கியது.

## ஒத்திவைப்பு

இந்திய - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்களுக்கு இடையேயான மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இரகசிய..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மல், முழு ஆளும் கட்சி எம். பிக்களையும் வெளிநடப்புச் செய்ய செய்துவிட்டால் சபையில் எதிரணி எம். பிக்களும், ஆளும் ஐ.தே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எட்டு எம். பிக்களும் மட்டுமே மிஞ்சுவர்.

இவர்கள் அனைவரும் ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தாலும் மொத்த எம். பிக்களின் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறமுடியாது போகும்.

இதனால் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட படி ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணை நடத்துவதற்கு வழி இல்லாமல் போய்விடும். அதாவது பிரேரணை தோற்றுப் போய்விடும்.

ஆனாலும் தனது எம்.பிக்களை வெளிநடப்புச் செய்ய வைக்கும் திட்டத்தை செயற்படுத்தினால்—

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி-சபையில் அரச தரப்பு எம். பிக்கள் எவரும் சமுகம் தராத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி—எதிர்க்கட்சிகள் பிரதமர் டி.பி. விஜே துங்காவுக்கும் அவரது அமைச்சரவைக்கும் எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிவிடுவதற்கு திட்டம் தீட்டியிருக்கின்றனவாம் (உ-3)

## புலிகளிடம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது விடுதலைப் புலிகளிடம் அகப்பட்ட சிப்பாய் ஒருவருக்கு பதிலாக சிறையிலிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் ஒருவரை விடுவிப்பது என்ற யோசனை தொடர்பாக புலிகளின் பதிலை அரசு எதிர்பார்த்திருக்கிறது.

''நாங்கள் எங்கள் முடிவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் தெரிவித்து விட்டோம். ஆனால் பதில் கிடைக்கவில்லை'' — என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

## ஸ்ரீலங்கா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன:

கடந்த புதன் 49 சிப்பாய்களும், வியாழன் 72 சிப்பாய்களும் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதைவிட, காயமடையும் பெரும் எண்ணிக்கையான படையினர் கொழும்பில் பல ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## சமாதான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விடுதலைப் புலிகளையும் பாக்கு நீரிணையில் அவர்களின் நடவடிக்கைகளையும் வெற்றி கொள்ள கூட்டுச் செயற்பாடு அவசியம் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org